# கம்புறுபிட்டிய பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 10 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் கம்புறுபிட்டிய பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்புறுபிட்டிய பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலையான சொத்துக்கள் கணக்கு மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி என்பன சமமாக இருக்க வேண்டிய போதிலும் அக்கணக்கு மீதிகளுக்கிடையே ரூபா 15,758,329 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 1,200,000 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்ட பெகோ இயந்திரத்தின் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊழியர் பிணை வைப்பிற்கான வட்டி ரூபா 27,426 தொகையானது கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கீழே குறிப்பிடப்படும் நாட்குறிப்புப் பதிவுகளினால் அந்தந்தக் கணக்கில் வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டமை காட்டப்பட்டிருந்த போதிலும் பொதுப் பேரேட்டில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

| நாட் குறிப்புப் பதிவு இலக்க | கணக்கு | பேரேட்டுப் பக்கம் | வரவு | செலவு |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா |
| 05 | கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் | 30 | 3,438,822 | - |
| | முத்திரைக் கட்டணக் கணக்கு | - | - | 3,438,822 |
| 08 | மூலதன செலவினம் | - | 83,145 | - |
| 09 | நிலுவை வாடகை | 07 | 1,440,175 | - |

(உ) மீளாய்வாண்டில் நீதி மன்றத் தண்டப் பணத்திற்கான நிதி ஏற்பாட்டை செய்வதற்காக நாட்குறிப்பு பதிவு இல. 06 இன் மூலம் ரூபா 204,508 தொகையான கிடைக்க வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம், அக்கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும் நாட்குறிப்பு பதிவு இல. 13 இன் மூலம் மீளாய்வாண்டிற்கான கடன்பட்டோர் ஏற்பாட்டினைச் செய்வதற்காக நானாவிதக் கடன்பட்டோர் மற்றும் மூலதனக் கணக்கு என்பவற்றுக்கிடையே வரவு மற்றும் செலவு வைக்கப்பட்ட பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் பேரேட்டின் ஆரம்ப மீதியை கணக்குகளுக்கு கொண்டு வரும் போது ஆரம்ப நாட்குறிப்பு பதிவின் மூலம் கணக்குகளில் வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

10 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 75,027,961 ஆக இருந்ததுடன் துணைப் பதிவேடுகள் மற்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 67,060,653 ஆனமையால் ரூபா 7,967,308 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் தொங்கல் கணக்குகளில் தீர்க்கப்படாத ரூபா 1,283,140 தொகையான செலவு மீதி இருந்தது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,560,675 ஆகக் காணப்பட்டது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

**கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

13 கணக்கு விடயங்கள் தொடர்பாக ரூபா 65,821,668 பெறுமதியான மீதிகளுக்கான நிலையான சொத்துப் பதிவேடு, மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள், பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு, மீதி உறுதிப்படுத்தல்கள் போன்றன காணப்படாமையால் அவ் விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்தவற்கு அல்லது ஏற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், | இணக்கமின்மைகள் |
|---|---|

| | | |
|---|---|---|
| | **பிரமாணங்களுடன் தொடர்பு** | |
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) | விதி 17 | பி.ச. 21 படிவத்தின் பிரகாரம் அடியிதழ்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 145 | ஒவ்வொரு வகையான வைப்புக்களிலும் காணப்படுகின்ற நிதி தொடர்பான விரிவான கூற்றொன்று ஒவ்வொரு வருட இறுதியிலும் தயாரித்திருக்கவில்லை. |
| (iii) | விதி 217, 218 | மெய்மையாய்வுச் சபை அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) | நி.பி. 396 | 06 மாதங்களை கடந்த ரூபா 1,598 பெறுமதியான 03 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 507 | கையிலுள்ள இருப்புக்களின் பெறுமதியை வருடாந்த கணக்குகளில் உள்ளடக்குவதற்காக ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் நிலையான சொத்துக்களின் உளமை தொடர்பான கூற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2005 மார்ச் 13 ஆந் திகதிய 08/2005 ஆம் இலக்க பொது | மூன்று உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட ஆதனக் கடன்களுக்காக வங்கிக் கடன் வட்டி வீதாசாரம் மற்றும் உத்தியோகத்தரிடமிருந்து |

| | | |
|---|---|---|
| | நிருவகச் சுற்றுநிருபம்- 11.5 ஆம் பந்தி | அறவிடப்பட்ட 4% வட்டிகளுக்கிடையேயான வேறுபாடு ரூபா 344,098 ஆன தொகை மீள் நிரப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய இலக்கம் ஐஏஐ/2002/02 கொண்ட திறைசேரிச் செயலாளரின் சுற்றுநிருபம் | இரண்டு கணனிகள் மற்றும் துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,419,132 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 945,602 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் உட்பட நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் 2011 மார்ச் 03 திகதிய எனது கடிதத்தின் பிரகாரம் குறிப்பிட்ட படிவத்தில் சமர்ப்பிக்கும் படி தலைவரை வேண்டிக் கொண்ட போதும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த பிழையற்றவை அல்ல என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு 2010 ரூபா.000 | 2009 ரூபா.000 | அதிகரிப்பு சதவீதப்படி % |
|---|---|---|---|
| வீதவரி | 804 | 592 | 35.81 |

| | | | |
|---|---|---|---|
| ஏக்கர் வரி | 192 | 169 | 13.61 |
| வாடகை | 2,176 | 1,497 | 45.36 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 208 | 102 | 103.92 |
| ஏனையவை | 31,869 | 20,323 | 56.81 |

### 2.2.2 நிலுவை வாடகை மற்றும் கட்டணம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 995,304 தொகையான நிலுவை வாடகை மற்றும் கட்டணம் என்பவற்றை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 விளம்பர பதாதைகள் - திறந்த சுற்றாடல்

(i) 2010 மார்ச் 19 ஆந் திகதிய 1646 இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்ற 38 விளம்பர அறிவிததல்களிலிருந்தும் ரூபா 108,729 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) விளம்பரக் கட்டணங்கள் அறவிடுகின்ற போது உப விதிகளின் 39.2, 39.3, 39.4, 39.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அப் பிரிவுகளுக்கு முரண்பாடுகின்ற போதும் 39.15 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 தொலைபேசி/ தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் இணைக்கப்பட்டிருந்த தொலைபேசி/ தொலைத் தொடர்பு இணைப்புத் கோபுரங்கள் நிர்மாணிக்கும் போது நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க

வர்த்தமானியின் (V) ஆம் பட்டோலையின் 6(ii) ஆம் பந்தியின் பிரகாரம் செயன்முறைக் கட்டணம் ரூபா 61,687 தொகை குறைவாகவும், 6(V) ஆம் பந்தியின் பிரகாரம் காப்பு அங்கீகாரம் வழங்கும் போது 03 தூண்களில் ரூபா 200,000 தொகையும், 7(V) ஆம் பந்தியின் பிரகாரம் 07 தூண்களுக்காக இணக்கச் சான்றிதழ் விநியோகிக்கப்படாத காரணத்தினால் அறவிடவேண்டிய ரூபா 29,000 கட்டணத்தையும் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதிமன்றம் ஒன்றினால் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 360,508 தொகைக்கான தண்டப் பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.6 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாகாண சபையிடமிருந்து ரூபா 3,615,822 தொகையான முத்திரைக் கட்டணமும் திறைசேரிப் பிரதிச் செயலாளரிடமிருந்து ரூபா 177.000 தொகையான முத்திரைக் கட்டணமும் கிடைக்க வேண்டியிருந்தன.

### 2.2.7 கடை வாடகை

தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய 2010/01 ஆம் இலக்க சுற்று நிரூபத்தின் பிரகாரம் கடை வாடகை உடன்படிக்கையும் மூன்று ஆண்டுகளுக்கு நாளது வரையாக்குதல், கடை வாடகை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிராததுடன் 2011 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு 50 கடைகளிலிருந்தும் ரூபா 444,054 தொகை நிலுவையாக இருந்தது.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு என்பன உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவு விடயம் | பாதீடு | உள்ளவாறான | முரண் | பாதீடு | உள்ளவாறான | முரண் |

| மீண்டுவரும் செலவுகள் | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ |
|---|---|---|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனம் | 14,653 | 15,327 | (674) | 15,180 | 13,232 | 1,948 |
| ஏனையவை | 7,005 | 7,480 | (475) | 6,733 | 4,856 | 1,877 |
| உப கூட்டுத் தொகை | 21,658 | 22,807 | (1,149) | 21,913 | 18,088 | 3,825 |
| மூலதன செலவுகள் | 19,503 | 19,503 | - | 30,545 | 29,130 | 1,415 |
| மொத்தக் கூட்டுத் தொகை | 41,161 | 42,310 | (1,149) | 52,458 | 47,218 | 5,240 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | 01 |
| இரண்டாம் தரம் | 11 | 15 |
| ஆரம்ப தரம் | 24 | 16 |
| ஏனையவை(அமைய,தற்காலிக, | - | 46 |
| மொத்தம் | 36 | 78 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்குகளின் பிரகாரம் பதவியணினரின் சம்பள மற்றும் சபை உறுப்பினர்களின் படிகள் என்பவைகளுக்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 15,327,057 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணைாளரிடமிருந்து ரூபா 10,277,150 தொகை மாத்திரமே மீளளிக்கப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் சபை நிதியத்திற்கு ரூபா 5,049,907 தொகையான மேலதிகச் செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரிச் செயலாளரின் 2002 சனவரி 03 ஆம் திகதி மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 14 ஆம் மற்றும் 28 ஆம் இலக்கத்தினால் உள்ளூராட்சி நிறவனங்களின் அமைய, நாளாந்த மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அவ்

அறிவுறுத்தல்களுக்கு முரணாக 46 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 4,000,884 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது சுற்று நிருப வகையில் ஆட்சேர்ப்புக்களைச் செய்தால் நிறுவனத் தலைவருக்காக தனிப்பட்ட ரீதியில் பொறுப்பினைக் கூற வேண்டும் எனவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 செயற்பாடற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

ரூபா 1,200,000 பெறுமதியில் உடுக்காவ இயந்திர பொறியியலாளர் காரியாலயத்தினால் 2009 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட பெகோ இயந்திரம் உபயோகத்திற்கு எடுக்கப்படாமல் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 2.5.2 கிடைக்க வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 497,406 ஆகும்.

### 2.5.3 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 784,741 ஆகக் காணப்பட்டதுடன் 01 வருட காலத்தை விஞ்சிய அறவீடுகள் நிலுவையாக இருந்த 18 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 69,512 ஆகும்.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

### 2.6.1 வீதி விளக்கு பராமரித்தல்

மீளாய்வாண்டில் வீதி விளக்கு பராமரித்தலுக்காக ரூபா 723,732 தொகையொன்றை சபை செலவு செய்திருந்ததுடன் இலங்கை மின்சார சபையிடமிருந்து ரூபா 44,064

தொகை மாத்திரமே மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தமையினால் ரூபா 679,668 தொகையான செலவுப் பொறுப்பொன்றினை சபைக்கு ஏற்படுத்தியிருந்தது.

### 2.6.2 கட்டிட விண்ணப்பப்படிவம் இல. 2011/31

2011 செப்தெம்பர் 23 ஆந் திகதி பரீட்சிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட கட்டிட விண்ணப்பப்படிவம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்ட்டன.

(i) கட்டிட விண்ணப்பத்திற்குரிய மூன்று மாடி வியாபாரக் கட்டிடம் அபிவிருத்தி அனுமதிப்பத்திரமின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ii) 239.49 சதுர மீற்றர் உடைய மூன்றுமாடிக் கட்டிடத்தின் கூரை மட்டம் வரை நிர்மாணிக்கப்ட்டிருந்தும் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சின் அறிவித்தலின் 6(ii) பிரிவின் பிரகாரம் காப்பு அங்கீகாரம் வழங்கும் போது ரூபா 239,490 தொகையான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கட்டளையின் 26(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணியின் எல்லை மற்றும் கட்டிடத்திற்கிடையே 3 மீற்றருக்கு குறையாத திறந்த இடைவெளியொன்று இருக்க வேண்டியிருந்த போதிலும் பௌதீக ரீதியாக 1.3 மீற்றர் மாத்திரமே காணப்பட்டது. கம்புறுப்பிட்டிய, முலட்டியான ஆ வகுப்பு வீதியில் அமைந்துள்ள இக்கட்டிடங்களின் கட்டிட எல்லை 12 மீற்றராக இருக்க வேண்டிய போதிலும் பௌதீக ரீதியில் 8.1 மீற்றர் மாத்திரமே காணப்பட்டது. கட்டிடத்தின் பின்புறத்தில் நீர் வடிந்தோடும் வாய்க்காலுக்காக வாய்க்கால் பாதுகாப்பும் இடப்பட்டிருக்கவில்லை.

(iv) மேற்கூறப்பட்ட விடயங்களின் பிரகாரம் நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க இக் கட்டிடம் நிர்மாணிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.7 ஒப்பந்த நிர்வாகம்

### மகநெகும கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

(i) சபை அதிகாரப் பிரதேசத்தில் மகநெகும கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட இஹல கெதர வீதி, தர்மாலோக மாவத்தை II ஆம் கட்டம், பொரலு கெட்டிய சந்தி தொடக்கம் கனேகம திப்பலஹேன வீதி, உள்ளல அலகொலமுல்ல போன்ற வீதிகளின் உள்ளக இணைப்புக்களுக்காக சிறு கற்கள் பதிக்கும் போது கற்களிடையே இடைவெளி 10 மில்லி மீற்றராக இருந்ததுடன் பெருந்தெருக்கள் அமைச்சுச் செயலாளரின் 2010 ஆம் ஆண்டிற்காக நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்ட அறிவுரைக் கடிதத்தின் பிரகாரம் அவ் வீதிகளில் 11,000 கொங்ரீட் சிறு கற்கள் போடப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த 04 வீதிகள் தொடர்பாக 2011 செப்தெம்பர் 28 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது ரூபா 157,963 பெறுமதியான 5.447 கொங்ரீட் சிறு கற்கள் குறைவாக போடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு